॥ ॐ ॥

सुन्दरकाण्डमाहात्म्यम् ॥

उमोवाच—

काण्डस्य सुन्दराख्यस्य माहात्म्यं तु महेश्वर ।
श्रोतुमिच्छामि ते वक्त्राद्विस्तराच्च विशेषतः ॥ १ ॥

श्री महेश्वर उवाच—

श्रीमत्सुन्दरकाण्डस्य माहात्म्यमतिगोपितम् ।
वक्ष्यामि शृणु ते प्रीत्या सङ्ग्रहेण गिरीन्द्रजे ॥ २ ॥
विस्तराद्वक्तुमीशस्तत् स एव रघुनन्दनः ॥ ३ ॥
यथा सर्वेषु देवेषु श्रीरामः परमो मतः ।
यथा सर्वेषु वृक्षेषु कल्पवृक्षो ह्यनुत्तमः ॥ ४ ॥
यथा सर्वेषु रत्नेषु कौस्तुभः श्लाघ्यते वरः ।
तथा रामायणे श्रीमान् सुन्दरः काण्ड उत्तमः ॥ ५ ॥
पठनाच्छ्रवणादस्य भक्त्या प्रवचनादपि ।
सिध्यन्ति सिद्धयः सर्वा अनर्थश्च विनश्यति ॥
पूर्यन्ते सम्पदः सर्वा नश्यन्ति सकला गदाः ॥ ६ ॥

1. பார்வதி சொல்கிறாள்:— ஹே ! மஹேச்வர! ஸ்ரீமத்ஸுந்தரகாண்டத்தின் மாஹாத்மியத்தை விசேஷமாக தங்கள் முகத்திலிருந்து விஸ்தாரமாகக் கேட்க நான் விரும்புகிறேன்.

2. மகேச்வரர் சொல்கிறார்:— ஹே! பார்வதி! ஸ்ரீ ஸுந்தரகாண்டத்தின் மிகவும் ரஹஸ்யமான மஹிமையை ஸங்கிரஹமாக உனக்குச் சொல்லுகிறேன். மிகவும் பிரியத்துடன் கேட்பாயாக.

3. அதை விஸ்தாரமாகச்சொல்ல ஸ்ரீராகவனே சக்தன்.

4-5. எவ்விதம் சகல தேவர்களிலும் ஸ்ரீராமன் உத்தமனோ, எவ்விதம் சகல விருக்ஷங்களிலும் கல்பகவிருக்ஷம் நிகரற்றதோ, ஸமஸ்த ரத்னங்களிலும் கௌஸ்துபம் எவ்விதம் ச்லாக்யமோ, அவ்விதமே ஸ்ரீமத்ராமாயணத்தில் ஸுந்தரகாண்டம் சிறந்தது.

6. இந்த ஸுந்தரகாண்டத்தை பக்தியுடன் பாராயணம் செய்தாலும், கேட்டாலும், பிரவசனம் செய்தாலும் ஸர்வாபீஷ்டங்களும் சித்திக்கின்றன. அநர்த்தம் இல்லாதாகும். சகல ஸம்பத்துக்களும் பூர்ணமாக உண்டாகும். எல்லா ரோகங்களும் நீங்கும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

विशेषतो महारोगभीतानां परमौषधम् ॥ ७ ॥
यक्ष्मापस्मारकुष्ठाद्या अनिवार्या महौषधैः।
अमुष्य पठनादष्टषष्टिकृत्वो विधानतः ॥
प्रणश्यन्ते न सन्देहः श्रीरामकरुणावशात् ॥ ८ ॥
निर्माय मण्डपं दिव्यं कदलीनारिकेलकैः
मुक्ताद्यैश्च वितानेनाप्यलंकृत्य यथाविधि ॥ ९ ॥
निर्माय वेदिकां तत्र चतुरश्रां मनोरमाम्।
अहतेन च पट्टेन शुक्लेनाच्छाद्य तां पुनः ॥ १० ॥
व्रीहीन् षट्प्रस्थमात्रान् वै तत्रादौ सन्निवेश्य च।
तदर्धांस्तण्डुलाञ्च्छुभ्रान् क्षिप्त्वा तदुपरि क्रमात् ॥ ११ ॥
अष्टादशपलस्वर्णनिर्मिते विस्तृताख्यके।
मौक्तिकानि समापूर्य पात्रे तत्स्वर्णपट्टतः ॥ १२ ॥
आच्छाद्य तत्र च पलस्वर्णनिर्मितपट्टके।
लिखित्वा श्रीरामयन्त्रं नवावरणसंयुतम् ॥ १३ ॥
यथाविधि प्रतिष्ठाप्य पूजयित्वा यथाविधि।
हैमीं कृत्वाऽत्र प्रतिमां सीतारामाञ्जनेयकां ॥ १४ ॥
अर्चयित्वा रामनामसाहस्रेणांबुजैर्वरैः।
तुलस्या मल्लिकाभिर्वा चम्पकैः केतकीदलैः ॥ १५ ॥
तत्सन्निधौ प्रयतकृच्छ्रीमद्रामायणोदितम्।
काण्डं श्रीसुन्दराभिख्यं पठेदव्यग्रमानसः ॥ १६ ॥

7. விசேஷமாக மஹாரோகிகளுக்கு இது திவ்யௌஷதம்.

8. மஹௌஷதங்களால் மாற்றமுடியாத க்ஷயம், அபஸ்மாரம், குஷ்டம் முதலிய ரோகங்களும், ஸ்ரீமத்ஸுந்தரகாண்டத்தை விதிமுறையாக 68 தடவை பாராயணம் செய்தால் ஸ்ரீராமன் கருணையால் நாசமடையும். ஸந்தேஹமில்லை.

9-16. ஒரு திவ்யமான மண்டபத்தை நிர்மாணம் செய்து, அதை வாழை, தேங்காய், முத்து, மேக்கட்டி, முதலியவற்றால் அலங்கரித்து, அவ்விடத்தில் நான்குமூலையாக ஒரு வேதியைச்செய்து, அதை ஒரு புது வெண்பட்டால் மறைத்து, அதில் ஆறுபடி நெல்லைப்போட்டு, அதன்மேல் மூன்றுபடி வெளுத்த அரிசியை இட்டு, அதன்மேல் 18 பலம் தங்கத்தால் செய்யப்பட்ட பரந்த வாயுடைய பாத்திரத்தில் முத்து நிரப்பி, அதை தங்கவஸ்திரத்தால் (ஸரிகைத்துணி) மூடிவைத்து, அதன்மேல் ஒரு பலம் தங்கத்தால் செய்யப்பட்ட தகிட்டில் நவாவரணங்களுடன் கூடின ஸ்ரீராமயந்திரத்தை எழுதிவைத்து, விதிமுறைப்படி பிரதிஷ்டை பூஜை இவைகளைச்செய்து, அதன்மேல் ஸீதை ஹனுமான் இவர்களோடுகூடின ஸ்ரீராமப்பிரதிமையை தங்கத்தால் செய்து வைத்து, நல்ல தாமரைபுஷ்பங்களாலாவது, துளஸியாலாவது, மல்லிகைகளாலாவது, சம்பகபுஷ்பங்களாலாவது தாழம்பூக்களாலாவது ஸ்ரீராமஸஹஸ்ரநாமத்தால் அர்ச்சனை செய்து, ஸ்ரீராமர் ஸந்நிதானத்தில் நியமத்துடன் ராமாயணத்திலிருக்கும் ஸ்ரீ ஸுந்தரகாண்டத்தை ஏகாக்ரசித்தனாக பாராயணம் செய்யவேண்டும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

प्रातर्मुहूर्तात् परतः समारभ्य प्रसन्नधीः।
सूर्ये गते व्योममध्यं विरमेत् पाठतोऽमुतः ॥ १७ ॥
पठेदनुदिनं चाष्टषष्टिकृत्वो यथा भवेत्।
अखण्डदीपं प्रज्वाल्य घृतवर्तिसमन्वितम्।
श्रोतारं कल्पयित्वा च भक्तं श्रीरामपादयोः ॥ १८ ॥
पूजयेच्च पुना रामं पाठान्तेऽपूपपायसैः।
समाप्य प्रथमावृत्तिं विप्रान् द्वादश पूजयेत् ॥ १९ ॥
अथ द्वितीयावृत्त्यादिसमाप्तौ श्रद्धया द्विजान्।
एकैकाधिकसङ्ख्याकान् भोजयेन्मधुपायसैः ॥ २० ॥
अष्टषष्टिदिनैरष्टषष्टिरावृत्तयो यदि।
श्रीमत्सुन्दरकाण्डस्य समाप्येरंस्तदुत्तमम् ॥ २१ ॥
यदि मासैश्चतुर्भिस्तु समाप्येताथ मध्यमम्।
षड्भिर्मासैः समाप्येत यदि स्यादधमं स्मृतम् ॥ २२ ॥
उत्तमं तत्स्मृतं यत्तु यजमानः स्वयं पठेत्।
विप्रद्वारा मध्यमं स्यात् पठेयुर्बहवो यदि ॥
अधमं तत्तु संप्रोक्तं पाठस्य क्रम ईरितः ॥ ॥ २३ ॥

17. பிராதக்காலத்தில் ஒரு முஹூர்த்தமான பிறகு, மனச்சந்துஷ்டியுடன் ஆரம்பித்து மத்தியான்னத்திற்குமுந்தியே பாராயணத்தை முடிக்கவேண்டும்.

18. நெய்யுடன் கூடின அகண்டதீபத்தை ஏற்றி, ஒரு ராமபக்தனை ச்ரோதாவாக கல்ப்பித்து, 68 ஆவர்த்தி முடிகிறவரையிலும் ஒவ்வொருநாளும் பாராயணம் செய்யவேண்டும்.

19. பாராயணமுடிவில் அப்பம் பாயஸம், முதலியவற்றை நிவேதனம் செய்து, ஸ்ரீராமனை பூஜை செய்யவேண்டும். முதல் தடவை (ஆவர்த்தி) பாராயணம் முடிந்ததும் 12 பிராமணர்களை ஆராதிக்கவேண்டும்.

20. பிறகு இரண்டாவதுதடவை முடிவுமுதல் ஒவ்வொரு ஸங்கியை அதிகமாக பிராமணர்களை தேன், பாயஸம் முதலியவைகளோடு ஆராதிக்கவேண்டும்.

21. 68 நாட்களில் ஸுந்தரகாண்டம் 68 தடவை பாராயணம் செய்து முடிக்கப்பட்டால் அதுவே உத்தமம்.

22. 4 மாதங்களில் 68 தடவை பாராயணம் முடிக்கப்பட்டால் மத்யமம். 6 மாதங்களால் முடிந்தால் அது அதமம்.

23. யஜமானன் தானே படிப்பது உத்தமம். பிராமணமுகமாக படிக்கச் செய்தால் அது மத்யமம், அனேகம் பேர்கள் படிப்பார்களேயானால் அது அதமம். என்று பாராயணக்ரமம் சொல்லப்பட்டிருக்கின்றது.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

अष्टषष्टितमावृत्तौ समाप्तायां यथाक्रमम् ।
पठित्वा युद्धकाण्डं च पञ्चभिः षड्भिरेव वा ॥
दिनैः पट्टाभिषेकाख्यं रामस्योत्सवमाचरेत् ॥ २४ ॥

अष्टषष्टितमावृत्तावारब्धायां यथाक्रमम् ।
आयुद्धकाण्डसम्पूर्ति सायङ्काले दिने दिने ॥
पूर्वाह्णे पठितान् सर्गान् भक्तिपूर्वं प्रवाचयेत् ॥ २५ ॥

वक्तारं कल्पयित्वाऽथ सर्वशास्त्रार्थपारगम्
श्रीरामभक्तिनिरतं पूजयित्वा द्विजोत्तमम् ॥ २६ ॥

शृणुयाद्रामचरितस्यार्थान्नस्यानुत्तमान् ॥ २७ ॥

एवमस्मिन् व्रते चीर्णे प्रसीदति रघूत्तमः ॥ २८ ॥

अश्विभ्यामपि ये रोगा असाध्याः स्युर्निवारणे ।
ते सद्यो नाशमेष्यन्ति दीर्घमायुश्च विन्दते ॥ २९ ॥

विरोधः पुत्रमित्राद्यैरानुकूल्येन शाम्यति ।
कुटुंबकलहो जीर्यत्यपमृत्युश्च नश्यति ॥ ३० ॥

24. 68ம் தடவை (ஆவர்தத்தி) முடிந்தால் கிரமமாக ஐந்து, அல்லது ஆறு நாட்களில் யுத்தகாண்டத்தையும் படித்து ஸ்ரீராமபட்டாபிஷேகம் நடத்தவேண்டும்.

25–26. 68ாவது தடவை (ஆவர்த்தி) பாராயணம் ஆரம்பித்தமுதல் யுத்த காண்டம் முடியும்வரையில் அந்தந்த நாட்களில் காலையில் பாராயணம் செய்த ஸர்க்கங்களை, சகல சாஸ்திரார்த்தங்களை அறிந்தவனும், ராமபக்தனுமான ஓர் பிராமணனை பூஜை செய்து வக்தாவாக கல்ப்பித்து ஸாயங்காலங்களில் பக்தியுடன் பிரவசனம் செய்விக்கவேண்டும்.

27. அவ்விதம் பிரவசனம் செய்யப்பட்ட ஸ்ரீராமசரித்தினுடைய உத்தம ரஸவத்துக்களான அர்த்தங்களை கேட்கவேண்டும்.

28. இவ்விதம் இந்த விரதத்தை செய்து, முடித்தால் ஸ்ரீராகவன் அனுக்கிரகிப்பார்.

29. அச்வினீதேவர்களால்கூட மாற்றமுடியாத ரோகங்கள்கூட நசிக்கின்றன. தீர்க்காயுஸ்ஸையுமடைவான்.

30. புத்திரன், மித்திரன் இவர்களுடனிருக்கும் விரோதம் அனுகூலமாகும், குடும்பகலகம் இல்லாதாகும்; துர்மரணம் உண்டாகாது.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

ऋणबाधा प्रशाम्येच्च शत्रूणां च जयो भवेत्।
बहुना किमिहोक्तेन सर्वाः सिध्यन्ति सिद्धयः ॥ ३१ ॥
व्रतमेतच्चाष्टषष्टिकृत्वो यस्त्वाचरिष्यति।
भवेयुर्वशगास्तस्य अणिमाद्यष्टसिद्धयः ॥ ३२ ॥
वैराग्यवान् व्रतमिदं भक्त्या यद्याचरिष्यति।
तं सुग्रीवमिव प्रीत्या राघवः संलपिष्यति ॥ ३३ ॥
एवं देवि सकृद्वाऽष्टषष्टिकृत्वः प्रपाठने।
फलं दृष्टचरं सर्वैस्ततोऽन्यत्र बहुत्र च ॥ ३४ ॥
एवं व्रतेन चीर्णेन वन्ध्या बह्व्योऽपि योषितः।
पुत्रपूर्णोत्सङ्गतला जाता रामप्रसादतः ॥ ३५ ॥
तस्मात्सर्वप्रयत्नेन दरिद्रेणापि देहिना।
यथाशक्ति व्ययं कृत्वा कार्यमेतद्व्रतं महत् ॥ ३६ ॥
वक्तृत्वे पठितृत्वे च द्विज एवाधिकारवान्।
श्रवणेऽधिकृताः सर्वे वर्णाश्चत्वार एव च ॥ ॥ ३७ ॥
शूद्रैर्देवालये कार्यमन्यैर्द्विजगृहेऽपि वा।
देवालये वा सङ्कल्प्य चरितव्यमिदं व्रतम् ॥ ३८ ॥

31. கடன் பாத்தியதை நீங்கும். சத்துருக்களை ஜயிக்கலாம். ரொம்பச் சொல்லியென்ன? எல்லா அபீஷ்டங்களும் ஸித்திக்கும்.

32. எவன் இந்த 68 தடவை பாராயணவிரதத்தைச் செய்கிருனே, அவனுக்கு அணிமாதிகளான அஷ்டஸித்திகளும் ஸ்வாதீனங்களாகின்றன.

33. யார் வைராக்யத்துடன் பக்தியோடுகூட இந்த விரதத்தைச் செய்கிருனே, அவரிடத்தில் ஸ்ரீராகவன் சுக்ரீவனிடத்தில்போல ஸல்லாபம் செய்வார்.

34. ஹே! பார்வதி! இவ்விதம் ஒரு தடவையாவது 68 ஆவர்த்தி பாராயணத்தை முடித்தால் அதன் பலம் எல்லாராலும் எல்லாவிடங்களிலும் அனுபவிக்கப்பட்டிருக்கின்றது.

35. இவ்விதம் விரதத்தை அனுஷ்டித்ததால் அநேகம் வந்திகள் (மலடிகள்) கூட ஸ்ரீராமபிரஸாதத்தால் மடியில் குழந்தைகள் நிறைந்தவர்களாயிருந்தார்கள்.

36. ஆகையால் ஏழையாக இருந்தாலும்கூட எப்படியாவது சக்திக்கனுசரித்து சிலவுசெய்து இந்த விரதத்தை அனுஷ்டிக்கவேண்டும்.

37. இதைப்படிப்பதிலும், பிரவசனம் செய்வதிலும் பிராமணன் ஒருவனே அதிகாரியாவான். ஆனல், கேட்பதில் நான்குவர்ணத்தாரும் அதிகாரிகளாவார்கள்.

38. சூத்ரர்களால் தேவாலயங்களிலும் (கோவில்களிலும்) மற்றவர்களால் பிராமணகிருஹத்திலோ, அல்லது தேவாலயத்திலோ, சங்கல்பம் செய்து இந்த விரதம் அனுஷ்டிக்கப்படவேண்டும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

किमुक्तेनेह बहुना व्रतमेतत् कलौ नृणाम्।
अर्पणे सर्वकामानां कल्पवृक्षायते ध्रुवम् ॥ ३९ ॥

पुनर्वक्ष्यामि गिरिजे शृणु त्वमवधानतः ॥ ४० ॥

एवं कर्तुमशक्तानां विधानानि बहूनि च।
सन्ति तान्यद्य वक्ष्यामि लोकानां हितकाम्यया॥ ४१ ॥

पठेद्द्वात्रिंशदावृत्ति काण्डं श्रीसुन्दराभिधम्।
चूडामणिप्रदानान्तं प्रथमे दिवसे पठेत् ॥ ४२ ॥

काण्डसंपूर्त्तिपर्यन्तं द्वितीये दिवसे पठेत्।
एवं द्वात्रिंशदावृत्ति चतुष्षष्ट्या दिनैः पठेत् ॥ ४३ ॥

चतुर्विंशतिकृत्वो वा द्वासप्ततिदिनैः पठेत्।
सीतादर्शनसर्गान्तं प्रथमे दिवसे पठेत् ॥ ४४ ॥

द्वितीयेऽशोकवनिकाभङ्गान्तं प्रयतः पठेत्।
तृतीये दिवसे काण्डं पठित्वा पूरयेत्सुधीः॥
एवं द्वासप्ततिदिनैर्व्रतमेतत्समापयेत् ॥ ४५ ॥

39. அதிகம் சொல்வதால் என்ன? கலிகாலத்தில் மனிதர்களுக்கு எல்லாவற்றையும் கொடுப்பதில் இந்த விரதம் கல்பகவிருக்ஷம்போலிருக்கின்றது.

40. ஹே! பார்வதி! மறுபடியும் நான் சொல்லுகிறேன். நீ சிரத்தையுடன் கேட்பாயாக.

41. இவ்விதம் செய்ய சக்தியற்றவர்களுக்கு வேறு அனேகம் விதிகள் இருக்கின்றன. ஜனங்களுக்கு ஹிதத்தைக்கோருவதால் அவற்றை இப்பொழுது சொல்லுகின்றேன்.

42-43. ஸுந்தரகாண்டத்தை 32 ஆவர்த்தி பாராயணம் செய்யவேண்டும். அதில் ஸீதை ஹனுமானிடம் சூடாமணியைக்கொடுப்பதைச்சொல்லும் 38-ாவது ஸர்க்கம் முடிய முதல்நாளிலும், அதிலிருந்து காண்டம்முடிய இரண்டாவது நாளிலுமாக 64 நாட்களில் 32 ஆவர்த்தி பாராயணம் செய்யவேண்டும்.

44-45. 72 நாட்களில் 24 ஆவர்த்தி பாராயணம் செய்யவேண்டும். அதில் ஸீதாதர்சனம் (15 ஸர்க்கம்) முடிய முதல்நாளிலும், அசோகவனமழித்தல் (41-ாவது ஸர்க்கம்) முடிய இரண்டாவது தினத்திலும், காண்டம் முடியும்வரையில் மூன்றுவது தினத்திலும் பாராயணம்செய்து, 72 நாட்களில் 24 தடவை பாராயணம் செய்யவேண்டும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

अष्टाचत्वारिंशदह्ना द्वादशावृत्ति वा पठेत् ।
सीतादर्शनसर्गान्तं प्रथमे दिवसे पठेत् ॥ ४६ ॥

सोऽवतीर्येति सर्गात्प्राग्द्वितीये विरमेद्दिने ।
हनूमदुपदेशान्तं रावणाय तृतीयके ॥ ४७ ॥

शेषं चतुर्थे काण्डस्य दिवसे संपठेत्सुधीः ।
अष्टाचत्वारिंशतैवं दिनैर्व्रतमिदं चरेत् ॥ ४८ ॥

सप्तकृत्वोऽथवा काण्डमष्टषष्ट्या दिनैः पठेत् ।
दिने दिने पठेत्सर्गान् सप्तैव विधिपूर्वकम् ॥
अष्टषष्टितमे काण्डं पूर्णं स्यात्सप्तसर्गतः ॥ ४९ ॥

अथवा तु द्विरावृत्ति पठेत् काण्डं प्रयत्नतः ।
दिनैश्च सप्तदशभिः प्रत्यहं चाष्टसर्गतः ॥ ॥ ५० ॥

एषु कल्पेषु सर्वेषु समाप्तिदिवसे प्रभोः ।
राज्यपट्टाभिषेकाख्यं पठेत्सर्गं प्रयत्नतः ॥ ५१ ॥

यथाविभवमर्यादं कारयेदुत्सवम् तथा ॥ ५२ ॥

46-48. 48 நாட்களில் 12 ஆவர்த்தி பாராயணம் செய்யவேண்டும். அதில் முதல்நாளில் ஸீதாதர்சனம் (15 ஸர்க்கம்) முடியவும், இரண்டாம் நாளில் सोऽवतीर्य द्रुमात्तस्मात् என்ற ஸர்க்கத்திற்கு (33 ஸர்க்கம்) முந்தியும், மூன்றும்நாளில் ஹனுமான் இராவணனுக்கு உபதேசம் செய்யும் 51 ஸர்க்கம் முடியவும், நான்காவது நாளில் காண்டம் முடியும்வரையிலுமாக 48 நாட்களில் 12 ஆவர்த்தி பாராயணம் செய்யவேண்டும்.

49. அல்லது ஒவ்வொரு நாளிலும் ஏழுஸர்க்கம் வீதம் பாராயணம்செய்து, 68 நாட்களில் 7 ஆவர்த்தி பாராயணம்செய்து முடிக்கலாம்.

50. அல்லது ஒவ்வொரு நாளிலும் எட்டு ஸர்க்கப்பிரகாரம் 17 நாட்களில் 2 ஆவர்த்தி பாராயணம்செய்து முடிக்கலாம்.

51. முன்சொன்ன எல்லா விதிகளிலும் பாராயணசமாப்தி தினத்தில் ஸ்ரீராமரது பட்டாபிஷேக (131 யுத்த) ஸர்க்கத்தை பாராயணம் செய்யவேண்டும்.

52. அவ்விதமே தன்விபவத்துக்குத்தக்கப்படி உத்ஸவமும் நடத்தவேண்டியது.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

प्रत्यहं पठनात् पूर्वं परं च विनिवेदयेत्
पयः सशर्करं तप्तं ताम्बूलं च फलानि च ॥ ५३ ॥

भोज्या विप्रा यथाशक्ति समाप्तौ द्विगुणं भवेत् ॥ ५४ ॥

सर्वथा यस्त्वशक्तः स्यादेषु कल्पेषु भूसुरः ।
सकृत्सुन्दरकाण्डन्तु पठेत् प्रयतमानसः ॥ ५५ ॥

एकाह्ना यः पठेत्प्रातः समारभ्यापराह्णतः ।
प्रागेव पूरयेत् काण्डमन्यग्रपदमुच्चकैः ॥
तस्य पुण्यफलं वक्तुं नैव शेषोऽपि शक्नुयात् ॥ ५६ ॥

तत्राप्यशक्तो द्विदिनं पठेत् कांक्षितसिद्धये ।
अङ्गुलीयकदानात्प्रागाद्येऽहनि विरामयेत् ॥
समापयेद्द्वितीयेऽह्नि फलं तस्याप्यनन्तकम् ॥ ५७ ॥

अथवाऽद्ये तु दिवसे पठेदास्वप्नदर्शनम् ।
द्वितीयेऽशोकवनिकाभङ्गात् प्राग्विरमेत्सुधीः ॥
तृतीये पूरयेत् काण्डं विधिरेष ह्यनुत्तमः ॥ ५८ ॥

53. ஒவ்வொருநாளிலும் பாராயணம் செய்வதற்கு முந்தியும், செய்த பிறகும் சர்க்கரையுடன் காய்ச்சின பாலும், தாம்பூலமும், பழங்களும் ஸ்ரீராமனுக்கு நிவேதனம் செய்யவேண்டும்.

54. கடைசி தினத்தில் தன் சக்தியை அனுசரித்து பிராமணசமாராதனம் செய்யவேண்டும். அப்படி செய்தால் இரண்டு பங்கு பலமுண்டாகும்.

55. முன்சொன்ன விதிப்பிரகாரம் எவன் செய்யச் சக்தியற்றவனே, அவன் ஓர் ஆவர்த்தி ஸுந்தரகாண்டத்தை பக்தியுடன் பாராயணம் செய்யலாம்.

56. எவனொருவன் ஒரு நாளில் விடியற்காலம் ஆரம்பித்து பிற்பகல்வரையில் உச்சஸ்வரத்தில் வ்யக்தமாகப்பாராயணம் செய்கிறானே, அவனுடைய புண்ய பலத்தைச்சொல்ல ஆதிசேஷனாலும் முடியாது.

57. அவ்விதமும் செய்ய முடியாதவன் இரண்டுநாட்களில் இஷ்டசித்திக்காக பாராயணம் செய்யலாம். அதில் முதல்நாள் அங்குலீயப்பிரதானத்திற்கு (36 ஸர்க்கம்) முந்தின ஸர்க்கம் முடிய பாராயணம்செய்து மறுநாள் காண்டத்தை முடிக்கவேண்டும். அதற்கும் பலமனந்தம்.

58. அல்லது முதல்நாளில் திரிஜடாஸ்வப்னம் (27 ஸர்க்கம்) முடிய பாராயணம் செய்து, இரண்டாம் நாளில் அசோகவனிகாபங்கம் வரையில் (40 ஸர்க்கம்) பாராயணம் செய்து, மூன்றும் நாளில் காண்டத்தை பூர்த்திசெய்யவேண்டும், இந்த விதியும் மிகச்சிறந்தது.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

एवं त्रिषु दिनेष्वेव महत् पारायणे फलम् ॥ ५९ ॥
अथवाऽऽद्ये हनुमताऽऽसीतादर्शनतः पठेत् ।
द्वितीये त्रिजटास्वप्नकथनान्तं पठेद्दिने ॥ ६० ॥

चूडामणिप्रदानान्तं तृतीये दिवसे पठेत् ।
लङ्कादाहान्तमेव स्याच्चतुर्थे पठनं दिने ।
पञ्चमे पूरयेत् काण्डमिति पञ्चदिनैर्विधिः ॥ ६१ ॥

पठेद्वा प्रत्यहं सर्गान् समारभ्य भृगोर्दिने ।
नवैव पुनरावृत्ते भृगोर्वारेऽवशेषितान् ॥ ६२ ॥

पञ्च सर्गान् पठित्वैव पठेत् पट्टाभिषेचनम् ।
एवमष्टदिनैरेष विधिः श्रीकामिनां वरः ॥ ६३ ॥

प्रथमे पञ्च पाठ्याः स्युर्द्वितीये सर्गका दश ।
तृतीये पञ्च षट् तुर्ये सप्त सर्गास्तु पञ्चमे ॥ ६४ ॥

षष्ठे तु सप्त सर्गाः स्युः सप्तमे द्वादशैव तु ।
अष्टमेऽष्ट दिने पाठ्या नवमे चाष्ट सर्गकाः ॥
विधिरेष महान् प्रोक्तो नवभिर्दिवसैः कृतः ॥ ६५ ॥

59. இவ்விதம் மூன்று நாட்களில் பாராயணம் செய்தால் மஹத்தான பல முண்டாகும்.

60-61. அல்லது, முதல்நாள் ஸீதாதர்சனம் (15 ஸர்க்கம்) முடியவும், இரண்டாவதுநாள் திரிஜடை ஸ்வப்னம் சொல்வது (27 ஸர்க்கம்) முடியவும், மூன்றுவது நாள் சூடாமணிப்பிரதானம் (38 ஸர்க்கம்) முடியவும், நான்காம்நாள் லங்காதஹனம் (54 ஸர்க்கம்) முடியவும், ஐந்தாம்நாள் காண்டத்தை முடிக்க வேண்டுமென்பது ஐந்துநாளில் பாராயணம் செய்யவேண்டிய விதி.

62—63. அல்லது, ஓர் வெள்ளிக்கிழமை தொடங்கி தினம் 9 ஸர்க்கப் பிரகாரம் பாராயணம் செய்து, மறுபடி அடுத்த வெள்ளிக்கிழமை பாக்கிவந்த தான 5 ஸர்க்கங்களை பாராயணம் செய்து பட்டாபிஷேகஸர்க்கத்தையும் பாராயணம் செய்யவேண்டுமென்பது தனத்தை விரும்புகிறவர்கள் 8 நாளில் செய்யவேண்டிய விதி.

64—65. அல்லது, முதல்நாள் 5, இரண்டாம்நாள் 10, மூன்றும்நாள் 5, நான்காம்நாள் 6, ஐந்தாம்நாள் 7, ஆறுவதுநாள் 7, ஏழாவதுநாள் 12, எட்டாவதுநாள் 8, ஒன்பதாவதுநாள் 8 ஸர்க்கங்கள் பாராயணம் செய்யவேண்டுமென்பது 9 நாளில் செய்யவேண்டிய மஹத்தான விதி.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

निवेदयेच्छर्करान्नं घृताक्तं प्रथमे दिने ।
अपूपान् पायसञ्चापि द्वितीये विनिवेदयेत् ॥ ६६ ॥
तृतीये तु तिलान्नं स्याच्चतुर्थे शष्कुलीद्वयम् ।
दध्यन्नं पञ्चमे दद्यात् षष्ठे दद्यात्तु मोदकान् ॥ ६७ ॥
नानाविधफलान्येव दद्याद्धस्ते तु सप्तमे ।
सूपान्नमष्टमे दद्यान्नवमे ससितं पयः ॥ ६८ ॥
अस्मिन् व्रते प्रवचनं कृतञ्चेदुत्तमोत्तमम् ॥ ६९ ॥
व्रतमन्यत् प्रवक्ष्यामि शृणु पार्वति कामदम् ॥ ७० ॥
दिने दिने तु षट् सर्गा दिनैकादशकं पठेत् ।
द्वादशे शिष्टसर्गौ द्वौ पठित्वा भक्तिपूर्वकम् ॥ ७१ ॥
विभीषणाभयकरं ततः सर्गद्वयं पठेत् ।
रावणेः कुंभकर्णस्य रावणस्य वधाश्रयम् ।
ततः सर्गत्रयं पाठ्यं ततो रामाभिषेचनम् ॥ ७२ ॥
दिनैरेवं द्वादशाभिर्व्रतमेतदनुत्तमम् ।
आचरन्नर्चयेद्रामं नाम्नां साहस्रतोऽन्वहम् ॥ ७३ ॥
रात्रौ तु प्रथमे यामे कृतं प्रवचनं यदि ।
महाफलं व्रतमिदं ह्यनुमन्येत राघवः ॥ ७४ ॥

66—69. முதல்நாள் சர்க்கரை பொங்கலும், இரண்டாம்நாள் அப்பங்களும் பாயஸமும், மூன்றாம்நாள் எள்ளன்னமும், நான்காம்நாள் இரண்டு முறுக்குகளும், ஐந்தாம்நாள் தத்யன்னமும் (தயிர்ச்சாதம்), ஆறுவதுநாள் கொழுக்கட்டைகளும், ஏழாவதுநாள் அனேகவித பழங்களும், எட்டாவதுநாள் பருப்பும் அன்னமும், ஒன்பதாவதுநாள் சர்க்கரையுடன் கூடிய பாலும் நிவேதனம் செய்ய வேண்டும். இந்த விரதத்தில் பிரவசனமும் செய்தால் மிக சிரேஷ்டமாகயிருக்கும்.

70. ஹே பார்வதி! விரும்பியதை கொடுக்கக்கூடியதான வேறொரு விரதத்தைச் சொல்லுகிறேன்; கேள்.

71—72. ஒவ்வொரு நாளும் ஆறு ஸர்க்கங்களாக 11 நாட்கள் படித்து 12-ாவதுநாளில் பாக்கிவந்த இரண்டு ஸர்க்கங்களையும், விபீஷணருக்கு அபயப்பிரதானம் செய்த (18, 19 யுத்) இரண்டு ஸர்க்கங்களையும், இந்திரஜித்துவதம், கும்பகர்ணவதம், ராவணவதம் (67, 91, 111 யுத்) என்ற மூன்று ஸர்க்கங்களையும் ஸ்ரீராமபட்டாபிஷேக(131 யுத்த)ஸர்க்கத்தையும் பக்தியுடன் படிக்கவேண்டும்.

73. இவ்விதம் 12 நாட்கள் இந்த உத்தமமான விரதத்தைச் செய்து கொண்டு, ஸஹஸ்ரநாமங்களால் ஸ்ரீராமசந்திரனை பூஜிக்கவேண்டியது.

74. இரவில் முதல் யாமத்தில் பிரவசனம் செய்தால் ஸ்ரீராமானுக்கிரஹத்தால் இந்த விரதம் பலவத்தாகும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

प्रत्यहं द्वौ पठेत् सर्गौ द्वाविंशत्या तु वासरैः ।
त्रयोविंशे पञ्च सर्गांश्चतुर्विंशे तु त्रीन् पठेत् ॥ ७५ ॥
पञ्चविंशे तु षट् पाठ्याः षड्विंशे त्रय एव च ।
सप्तविंशे तु चत्वारः प्राप्तेऽष्टाविंशके दिने ॥ ७६ ॥
अवशिष्टान् पठित्वा त्रीन्दशाननवधं ततः ।
पट्टाभिषेकं कुर्यात्तु यथा विभवविस्तरम् ॥ ७७ ॥
एषु सर्वेषु कल्पेषु यद्यशक्तो यथासुखम् ।
पठित्वा रचयेद्रामपट्टाभिषवमुत्सवम् ॥ ७८ ॥
मुमुक्षुर्भवपाथोधिं तरितुं यदि वाञ्छति ।
पठेत्तु प्रथमं सर्गं प्रातरेव ऋतुत्रयम् ॥ ७९ ॥
भूतवेतालकूष्माण्डपिशाचादिग्रहैः कृताम् ।
पीडामपानुदन् लङ्काविजयं सर्गमापठेत् ॥ ८० ॥
बुद्धिमान्द्यमपाकर्तुं हनुमच्चिन्तनं पठेत् । ॥ ८१ ॥
पारदारिकतादोषशान्तये हनुमत्कृतम् ।
रावणान्तःपुरे सीतान्वेषणं प्रयतः पठेत् ॥ ८२ ॥

75—77. அல்லது தினம் இரண்டு ஸர்க்கங்களாக இருபத்திரண்டுநாட்கள் படித்து, இருபத்திமூன்றும்நாள் ஐந்து ஸர்க்கங்களும், இருபத்திநான்காம் நாள் மூன்று ஸர்க்கங்களும், இருபத்தைந்தாம்நாள் ஆறு ஸர்க்கங்களும, இருபத்தாறும்நாள் மூன்று ஸர்க்கங்களும், இருபத்தேழாம்நாள் நான்கு ஸர்க்கங்களும், இருபத்தெட்டாம்நாள் மிகுதியுள்ள மூன்று ஸர்க்கங்களையும் படித்து, ராவண வதத்தையும் (111 யுத்) படித்து சக்தியனுசரித்து ஸ்ரீராமபட்டாபிஷேகம் செய்ய வேண்டியது.

78. மேற்சொன்ன எல்லா முறைகளிலும் செய்ய சக்தியற்றவனுகில், எப்படியாவது ஸுந்தரகாண்டத்தைப் படித்து ஸ்ரீராமபட்டாபிஷேகத்தை செய்ய வேண்டியது.

79. ஸம்ஸாரஸாகரத்தைக் கடக்க விரும்புகிறவன் மூன்று ருதுக்கள் (ஆறுமாதங்கள்) விடியற்காலத்தில் ஸுந்தரகாண்டத்தின் முதல்ஸர்க்கத்தை படிக்கவேண்டும்.

80. பூதம், வேதாளம், கூச்மாண்டம், பிசாசு முதலியவற்றுல் உண்டான உபத்திரவம் நீங்கவேண்டுமென்பவன் லங்காவிஜயம் என்ற (3) ஸர்க்கத்தைப் படிக்கவேண்டும்.

81. புத்திகுறைவு நீங்கவேண்டுமாஞல் ஹனுமான்சிந்தை செய்யும் (13) ஸர்க்கத்தைப் படிக்கவேண்டும்.

82. பரஸ்திரீகமனதோஷசாந்திக்காக ஹனுமான், இராவணாந்தப்புரத்தில் ஸீதாதேவியைத் தேடினதான (7, 8, 9, 10, 11) ஸர்க்கங்களை சுத்தனுகப் படிக்கவேண்டியது.

CC-0. In Public Domain: Digitized by Muthulakshmi Research Academy

सीतादर्शनसर्गन्तु वायुपुत्रेण यः पठेत् ।
कुबेर इव नित्यश्रीर्भूत्वा मोदेत भूतले ॥ ८३ ॥
पठेत्तु त्रिजटास्वप्नं दुःस्वप्नापन्निवृत्तये ॥ ८४ ॥
सत्त्वाभिवृद्धिकामस्तु सीताया रावणस्य च ।
पठेत्सर्गद्वयं वादं भारं न्यस्य रघूत्तमे ॥ ८५ ॥
विश्लिष्टबन्धुभिः सार्धं पुनः संयोगमिच्छता ।
सीताहनुमतोः सर्गाः पाठ्याः संवादकात्मकाः ॥ ८६ ॥
अङ्गुलीयार्पणं सर्गं पठेदापत्प्रशान्तये ॥ ८७ ॥
मत्याऽमत्या च रामस्य कृतानां विविधागसाम् ।
प्रशान्तये पठेत्सर्गं काकानुग्रहकारकम् ॥ ८८ ॥
आनन्दरूपब्रह्मत्वप्रेप्सुता यदि चेन्नृणाम् ।
चूडामणिप्रदानाख्यः पाठ्यः सर्गो हनूमते ॥ ८९ ॥
शत्रूणां जयकामस्तु रक्षसां हनुमत्कृतम् ।
निधनं किङ्करादीनां प्रयतः प्रपठेत् प्रगे ॥ ९० ॥

83. ஹனுமான் சீதாதேவியைக்கண்டதான (15) ஸர்க்கத்தை ஒருவன படிப்பானேயானால் குபேரன்போல் பூமியில் தனவந்தனாக பவித்து சந்தோஷப்படுவான்.

84. துர்ஸ்வப்னத்தாலுண்டான தோஷநிவர்த்திக்காக திரிஜடாஸ்வப்பனத்தை (27 ஸர்) படிக்கவேண்டும்.

85. ஸத்வகுணாபிவிருத்திக்காசை கொண்டவன் ஸீதாராவணஸம்வாதத்தை (20, 21) ஸ்ரீராமனிடத்தில் பாரத்தைவைத்து படிக்கவேண்டும்.

86. தன்னை விட்டுப்பிரிந்த பந்துக்களுடன் சேர ஆவல்கொண்டவன் ஸீதை, ஹனுமான் இவர்களுடைய ஸம்வாதரூபமான 33முதல் 40 வரையிலுள்ள ஸர்க்கங்களைப் படிக்கவேண்டும்.

87. ஆபத்து நீங்கவேண்டுமானால் கணையாழி கொடுப்பதை (36) படிக்கவேண்டும்.

88. தெரிந்தோ, தெரியாமலோ ஸ்ரீராமருக்குச் செய்த பலவித அபராதங்களையும் க்ஷமிக்கவேண்டுமானால் காகாஸுரனுக்கு அனுக்கிரஹம் செய்த (38) ஸர்க்கத்தை படிக்கவேண்டும்.

89. ஆனந்தரூபமான பரப்பிரம்மஸ்வரூபத்தை அடையவேண்டுமானால் ஹனுமானுக்கு சூடாமணியைக் கொடுத்த (38) ஸர்க்கத்தைப் படிக்கவேண்டும்.

90. சத்துருக்களை ஜயிக்கவேண்டுமானால் ஹனுமான் கிங்கராதிகளை வதம் செய்ததான 42முதல் 47வரையிலுள்ள ஸர்க்கங்களைப் படிக்கவேண்டும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

धर्माभिवृद्धिकामास्तु रावणाय हनूमता ।
सन्देशकथनं धर्म्यं पठेयुर्भक्तिपूर्वकम् ॥ ९१ ॥
गृहारामादिवृद्ध्यर्थं लङ्कादाहं पठेद्यतः ॥ ९२ ॥
पठन् मधुवनध्वंसं वानरैः कृतमादरात् ।
क्षुत्पिपासातिगो ब्रह्मलोके शान्तः सुखं वसेत् ॥ ९३ ॥
रामाय हनुमत्प्रोक्तं सीतासन्देशमादृतः ।
पठन्नामरणं भुक्तिमुक्ती रामात्प्रपद्यते ॥ ९४ ॥
अशोकवनिकाभङ्गं पठित्वा चिन्तितार्थभाक् ॥ ९५ ॥
सीतावर्णनसर्गेण पठितेन विरागिणः ।
ज्ञानं ब्रह्मेति निखिलं बीभत्सा च भवे भवेत् ॥ ९६ ॥
किं बहूक्तेन गिरिजे यां सिद्धिं पठनान्नरः ।
श्रीमत्सुन्दरकाण्डस्य न लभेत न साऽस्ति हि ॥ ९७ ॥
पुत्रार्थी लभते पुत्रं सप्तकृत्वः प्रपाठनात् ॥ ९८ ॥
लभते निधिमव्यग्रः सकृदष्टदिनैः पठन् ॥ ९९ ॥
सकृन्नवदिनैः पाठात्कन्येयात् सदृशं पतिम् ॥ १०० ॥

91. தருமம் விருத்தியடைய விரும்பியவர்கள் ஹனுமான் இராவணனுக்குச் செய்த தர்மயுக்தமான ஸந்தேசத்தைப் (51) படிக்கவேண்டும்.

92. வீடு, தோப்பு முதலியவை விருத்தியாகவேண்டுமானால் லங்காதகனத்தை (54) படிக்கவேண்டியது.

93. வானரங்கள் மதுவனத்தையழித்ததைப் (61) படித்தால் பசி, தாஹம் இவை இல்லாதவனுய் சாந்தனுக பிரம்மலோகத்தில் சுகமாக வசிப்பான்.

94. ஹனுமான் ஸ்ரீராமருக்கு ஸீதாஸந்தேசத்தைச் சொல்வதை (67) படித்தால் ஸ்ரீராமனிடமிருந்து புக்தியும் முக்தியும் அடைவான்.

95. அசோகவனிகாபங்கத்தைப்(41)படித்தால் நினைத்த காரியம் கைகூடும்.

96. ஸீதாவர்ணனஸர்க்கத்தைப் (19) படித்தால் ஆசைகளையொழித்த ஒருவனுக்கு, ஸர்வம் பிரம்மமயம் என்ற அறிவும் ஸம்ஸாரத்தில் நிந்தாபுத்தியும் உண்டாகும்.

97. அதிகம் சொல்வதெதற்கு? ஹே பார்வதி! ஒருவன் சுந்தரகாண்டத்தைப் படித்தால் அடைய முடியாதது ஒன்றுமேயில்லை.

98. புத்திரனை இச்சித்தவன் ஏழுதடவை பாராயணத்தால் புத்திரனை அடைகிறான்.

99. எட்டுநாட்களில் ஒருதடவை பாராயணம் செய்பவன் நிதியை அடைவான்.

100. ஒன்பதுநாட்களில் ஒருதடவை பாராயணம் செய்தால் கன்னிகை தகுந்த கணவனை அடைவாள்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

उक्तैरेभिः सर्वकल्पै रामप्रीतिरनल्पिका ।
मोक्षान्तसिद्धिदा जाता किं न कुर्यात् सुखं भुवि ॥ १०१ ॥
सकृदेकदिने पाठस्तारयेत्तु महापदः ॥ १०२ ॥
यं यं कामं हृदाऽऽचिन्त्य पाठव्रतमुपाचरेत् ।
तं तं हस्तस्थितमिव गणयेद्व्रतवान् पुमान् ॥ १०३ ॥
सर्वे रोगाः प्रशाम्यन्ति नश्येत्सकलदुष्कृतम् ॥ १०४ ॥
पूर्वं पश्चाच्च पठनान्नैवेद्यं न करोति यः ।
तस्य सिद्धिं जायमानां प्रतिबध्नाति मारुतिः । ॥ १०५ ॥
स्त्रियः शूद्राश्च शृणुयुः पाठयित्वा द्विजर्षभैः ॥ १०६ ॥
सर्वेष्वेतेषु कल्पेषु रामं सीतां च मारुतिम् ।
नाम्नां सहस्रतोऽभ्यर्चेदुत्तमं स्यात्तदा व्रतम् ॥ १०७ ॥
अशक्तोऽष्टोत्तरशतेनार्चयेत्तत्तु मध्यमम् ॥ १०८ ॥
गव्यं क्षीरं शर्कराढ्यं सुतप्तं च सुखोष्णकम् ।
निवेदयेद्राघवाय सर्वप्रतिनिधिस्त्विदम् ॥ १०९ ॥

101. முன்சொன்ன சகல விதிகளாலும் மோட்சம்வரையிலுமுள்ள பலத்தைக் கொடுக்கும் அளவற்ற ஸ்ரீராமப்பிரஸாதம் பூலோகத்தில் என்ன சுகத்தைத்தான் செய்யாது ?

102. ஒரு நாளில் ஒருதடவை பாராயணம் செய்தால் பெரிய ஆபத்துகள் நீங்கும்.

103. எந்தெந்த பலத்தை மனதில் நினைத்து பாராயணவிரதத்தைச் செய்கிறானே, அந்தந்த பலம் கையில் இருப்பதாகவே எண்ணலாம்-

104. சகல ரோகங்களும், எல்லா பாபங்களும் நசிக்கின்றன.

105. பாராயணம் செய்வதற்கு முன்பும் பின்பும் எவனொருவன் நிவேதனம் செய்யாதிருப்பானே, அவனுக்குண்டாகும் பலனை உண்டாகாமல் ஹனுமான் தடை செய்கிறார்.

106. ஸ்திரீகளும் சூத்திரர்களும் பிராமணனைக்கொண்டு படிக்கச்சொல்லி கேட்கவேண்டும்.

107. இந்த எல்லா விதிகளிலும் ஸ்ரீராமனையும் ஸீதையையும் ஹனுமானையும் ஸஹஸ்ரநாமத்தால் பூஜிக்கவேண்டும். இந்த விரதம் உத்தமம்.

108. சக்தியற்றவன் அஷ்டோத்தரசதத்தாலர்ச்சிக்கவேண்டும். இந்த விரதம் மத்திமம்.

109. நன்றாக காய்ச்சினதும் இளஞ்சூடுள்ளதும், சர்க்கரையோடு கூடினதுமான பசுவின்பாலை ஸ்ரீராகவனுக்கு நிவேதனம் செய்யவேண்டும். இது எல்லாவற்றிற்கும் பிரதிவிதியாகும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

पद्मानि तुलसीपत्राण्युत्तमानि प्रपूजने ।
तदलाभे यथालाभं पुष्पैरर्चेद्रघूत्तमम् ॥ ११० ॥

करवीरसुमैः पूजां न कदाऽपि व्रती चरेत् ।
केतकीकुसुमानि स्युरलङ्काराय केवलम् ॥ १११ ॥

दाडिमीफलनैवेद्यमनर्घ्यफलदायकम् ॥ ११२ ॥

आवाहने विसर्गे वा पूजान्ते वन्दनादिषु ।
पठेत्तु रामगायत्रीं वशयेद्राघवं व्रती ॥ ११३ ॥

पूजासाद्गुण्यसिध्यर्थं सावित्रीं वा षडक्षरीम् ।
जपेद्वा रामगायत्रीं ज्ञाताज्ञाताघशान्तये ॥ ११४ ॥

दशावरणयन्त्रस्था रामपूजोत्तमा स्मृता ।
नवावरणयन्त्रश्चेन्मध्यमं तत्प्रपूजनम् ॥ ११५ ॥

एतद्यन्त्रद्वयस्यापि सन्निधौ पठनं यदि ।
प्रतिमाकरणे यत्नं निर्बन्धान्नैव कारयेत् ॥ ११६ ॥

110. ஸ்ரீராமனை பூஜிப்பதற்கு தாமரைப்பூக்களும், துளசியும் மிகச் சிறந்தவை. அவை இல்லாவிடில் கிடைத்த புஷ்பபங்களால் ஸ்ரீராமனை பூஜிக்கலாம்.

111. கரவீர (அரளி) பூக்களால் ஒருபோதும் பூஜை செய்யக்கூடாது. தாழம்பூக்களால் அலங்காரம் மட்டும் செய்யலாம்.

112. மாதளம்பழத்தை நிவேதனம் செய்தால் அளவற்ற பலனுண்டாகும்.

113. விரதியானவன் ஆவாஹனத்திலும், விஸர்ஜனத்திலும், பூஜைக்கடைசியிலும், நமஸ்காரம் முதலியவற்றிலும் ராமகாயத்ரீமந்திரத்தை ஜபித்து ஸ்ரீராகவனை வசப்படுத்தவும். (दाशरथाय विद्महे सीतावल्लभाय धीमहि। तन्नो रामः प्रचोदयात् என்று ராமகாயத்ரீமந்திரம்.)

114. பூஜையின் பூர்ணபலனை அடையவும், தெரிந்தோ தெரியாமலோ உள்ள பாபம் நீரவும் காயத்ரியையாவது, रां रामाय नमः என்ற ஷடக்ஷரியையாவது ராமகாயத்ரியையாவது ஜபிக்கவேண்டும்.

115. தசாவரணயந்திரத்தில் ஸ்ரீராமபூஜை செய்வது உத்தமம். நவாவரணயந்திரதில் செய்வது மத்திமம். (தசாவரணயந்திரத்தின் ஸ்வரூபம் பின் வருமாறு. மத்தியில் ஷட்கோணமும், அதைச்சுற்றி அஷ்டதளமும், அதையும் சுற்றி அஷ்டதளமும், அதைச்சுற்றி த்வாதசதளமும், அதைச்சுற்றி ஷோடசதளமும், அதைச்சுற்றி த்வாத்திரிம்சத்தளமும், பிறகு பூகிருஹத்ரயமும் இருக்கவேண்டும். இதில் முதல் அஷ்டதளத்தின் மத்தியும், அக்ரமும் ஒரே ஆவரணம்.

116. இந்த இரண்டு இயந்திரங்களின் பக்கத்தில் பாராயணம்செய்யும் பக்ஷத்தில் பிரதிமை செய்யவேண்டுமென்று கட்டாயமில்லை.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

अशक्तः प्रतिमाकल्पौ यन्त्रस्थापि यदि द्विजः ।
श्रीमद्रामायणग्रन्थे पूजयेद्रघुसत्तमम् ॥
तत्र सन्निहितो नित्यं रामः सपरिवारकः ॥ ११७ ॥

व्रतकाले ब्रह्मचर्यव्रतवान् व्रतवान् भवेत् ॥ ११८ ॥

स्नाताः शुद्धसमाचारा अशुद्धैः सङ्गवर्जिताः ।
भवेयुर्यजमानश्च वक्ता श्रोतार एव च ॥ ११९ ॥

एतद्गुह्यं मया प्रोक्तं रहस्यं गिरिनन्दिनि ।
प्रब्रूयात्सनकादिभ्यो नन्द्ययं द्वापरान्तिके ।
ते नारदाय सोऽवन्यां सर्वं विस्तारयिष्यति ॥ १२० ॥

यस्त्विदन्ते मया प्रोक्तं क्रमं पारायणस्य च ।
श्रीमत्सुन्दरकाण्डस्य पठेद्वा शृणुयाच्च वा ॥
स रामे भक्तिमान् भूत्वा सर्वां सिद्धिं निगच्छति ॥ १२१ ॥

117. பிரதிமையையாவது யந்திரத்தையாவது செய்ய சக்தியில்லாதவன் ஸ்ரீராமாயணகிரந்தத்தில் ஸ்ரீராமனை பூஜை செய்யலாம். ஏனென்றால் அவ்விடத்தில் ஸ்ரீராமன் பரிவாரங்களுடன் எப்பொழுதும் இருக்கிறார்.

118. விரதத்தை அனுஷ்டிப்பவன் விரதகாலத்தில் பிரம்மசாரியாக இருக்கவேண்டும்.

119. யஜமானனும், வக்தாவும், கேட்போர்களும் ஸ்நானம் செய்து, சுத்தர்களாகவும், அசுத்தர்களோடு சேராமலும் இருக்கவேண்டும்.

120. ஹே பார்வதி! என்னால் சொல்லப்பட்ட ரஹஸ்யமான இந்த தத்வத்தை த்வாபரயுகத்தின் கடைசியில் நந்தி ஸனகாதிகளுக்குச் சொல்லுவான்; அவர்கள் நாரதருக்குச் சொல்லுவார்கள்; அவர் பூமியில் இதை விஸ்தாரம் செய்வார்.

121. என்னால் உனக்கு சொல்லப்பட்ட ஸுந்தரகாண்டத்தின் பாராயணக்கிரமத்தை படிக்கவாவது கேட்கவாவது எவன் செய்கிறானோ அவன் ஸ்ரீராம பக்தனாக பவித்து சகல ஸித்திகளையும் பெறுவான்.

इत्युमासंहितायां सुन्दरकाण्डमाहात्म्यं सम्पूर्णम् ॥

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy